**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 86/2016**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.04.2026 | | |
| பெயர்: | மூர்த்தி<br>(PW2– Cross ) | தகப்பனார் பெயர்: | நாராயணசாமி |
| கிராமம்: | 56.நிம்மேலி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 74/2026 |

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 07.04.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.09)**

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். எனக்கு வாதியை சுமார் 20 வருடங்களுக்கு மேலாக தெரியும். வாதி என்ன பரிகாரத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் வீட்டு சுவற்றிற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி வீட்டிற்கு வடபுறத்தில் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். வாதி தாவா சொத்தை 2004 ல் வாங்குவதற்கு முன்பாகவே தாவா சொத்திற்கு வடக்கில் 1ம் பிரதிவாதி 1997 ம் ஆண்டிலேயே அவர் குடியிருக்கும் ஓட்டு வீட்டிற்கு குடி வந்துவிட்டார் என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி புதிதாக வீடு கட்டவில்லை என்றாலும், ஏற்கனவே அந்த இடத்தில் இருந்த ஓட்டு வீட்டை தான் கிரயம் வாங்கினார் என்றாலும், சரிதான். தாவா சொத்தை வாதிக்கு நான் தான் மத்தியஸ்தராக இருந்து வாங்கி கொடுத்தேன். தாவா சொத்து கணேச ஐயருக்கு சொந்தமானது என்றால் சரிதான். கணேச ஐயரின் மகள் பெயர் சிவகாமசுந்தரி. ஆத்மநாத ஐயர் தான் சிவகாமசுந்தரியின் கணவர் என்றால் சரிதான். தாவா சொத்தை 2004ல் வாதிக்கு ஆத்மநாத ஐயர் தான் கிரயம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தில் 9ம் பக்கத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்து ஆத்மநாத ஐயரின் இரண்டாவது மகன் இரண்டாவதாக கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். கணேச ஐயர் கடந்த 1975 ல் வா.சா.ஆ.2 ஆவணமான உயில் படி தாவா சொத்தை தனது மகள் சிவகாமசுந்தரிக்கு எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆத்மநாத ஐயருக்கு குருராமமூர்த்தி என்ற மூத்த மகன் உண்டு. வா.சா.ஆ.2 ஆவணமான உயிலில் மேற்படி குருராமமூர்த்தி இரண்டாவதாக சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.3 ஆவணத்தில் குருராமமூர்த்தியோ, கிருஷ்ணமூர்த்தியோ தரப்பினர் இல்லை என்றால் சரிதான். சிவகாமசுந்தரிக்கு ஆத்மநாதன், குருராமமூர்த்தி மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூவரும் வாரிசுகள் என்றால் சரிதான். அதனால் தாவா சொத்தை விற்பனை செய்வதற்கு ஆத்மநாத ஐயருக்கு முழு உரிமை கிடையாது என்றால் சரிதான். அவருடைய மகன்களான குருராமமூர்த்தி மற்றும் கிருஷ்ணமூர்த்தியுடன் சேர்ந்துதான் தாவா சொத்தை விற்பனை செய்ய முடியும் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சிவகாமசுந்தரியின் இறப்பு சான்றிதழோ அல்லது வாரிசு சான்றிதழோ இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வாதி உமாமகேஸ்வரி மேற்படி விபரத்தை தெரிந்து கொண்டு தான் ஆத்மநாத ஐயரிடம் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். தாவா சொத்தை 2004ல் வாதி கிரயம் பெறும்போது கிருஷ்ணமூர்த்தி, குருராமமூர்த்தியும் உயிரோடு தான் இருந்தார்கள் என்றால் சரிதான். சட்டத்தின் பார்வையில் வா.சா.ஆ.3 கிரய பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6. எனது முதல் விசாரணையில் தாவா சொத்தின் சர்வே எண்ணை பற்றி சொல்லியுள்ளேன். அதன் விஸ்தீரணம் 17 சென்ட் ஆகும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்து விபரத்தில் இரண்டாவது அயிட்ட சொத்தாக நத்தம் ஆர்.எஸ்.எண்.246/1 புதிய புல எண்.359/15 விஸ்தீரணம் 17 சென்ட் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயிலில் தாவா சொத்திற்குரிய

புல எண்.246/1 – 16 சென்ட் என்றும், புல எண்.246/4பி – 7 சென்ட் எனவும், ஆக கூடுதல் 23 சென்ட் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. ஆனால், வா.சா.ஆ.3 ஆவணத்தில் புல எண்.246/1 – 17 சென்ட் என்றும், புல எண்.246/4பி – 7 சென்ட் எனவும், ஆக கூடுதல் 24 சென்ட் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 மற்றும் 2 ஆவணங்களுக்கிடையில் புல எண்.246/1 ஐ பொறுத்து 1 சென்ட் கூடுதலாக உள்ளது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் புல எண்.246/1 ல் பூமியில் 17 சென்ட் உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வருவாய்துறையில் வேலை செய்யவில்லை.

8. நிலத்தை எவ்வாறு அளவீடு செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியாது. நான் வாதியின் இடத்தை அளந்து பார்க்கவில்லை. வா.சா.ஆ.3 மற்றும் 2 ஆவணங்களுக்கிடையில் கூடுதலாக உள்ள 1 சென்ட்டை பொறுத்து நான் எதுவும் அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். வாதி கூறியதை தான் நான் 17 சென்ட் என்று கூறினேன். நான் தனியாக அளந்து பார்க்கவில்லை. எனது முதல் விசாரணையில் தாவா சொத்தை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை.

9. நான் குடியிருக்கும் இடத்திற்கும், தாவா சொத்திற்கும் இடையில் சுமார் 2கி.மீ தொலைவு இருக்கும் என்றால் இல்லை சுமார் ¾ கி.மீ இருக்கலாம். எங்கள் வீட்டிலிருந்து பார்த்தால் வாதியின் வீடு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஏற்பட காரணமான நான் ஆதாய சாட்சி என்பதால் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. எனது முதன்மை விசாரணைக்கும், எனது சாட்சியத்திற்கும் முரண்பாடுகள் உள்ளதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் எனது துணையுடன் வாதியால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.36)**